Shalom

ஆண்டு சந்தா ரூ. 60/-

# விழிப்பு பணிப்பு இயக்கம்

செய்திமலர்


மலர் : 4
இதழ் : 10

ஆகஸ்ட் 2008




## தேசத்துக்கு க்ஷேமத்தைக் கொடுப்பேன்

2 நாளாகமம் 7:14

ஆசிரியர் சகோ. வே. தேவதாஸ்

# சுதேச ஊழியர் சாட்சி சகோ. தேருமேடா



சகோ. தேருமேடா மத்தியபிரதேத்தில் ஜாபுவா மாவட்டத்தில் நகாரி கிராமத்தைச் சேர்ந்த பீல் ஆதிவாசி. இவர் இயேசுவை அறியாத ஒரு புற இன குடும்பத்தில் பிறந்தவர். இவர் சாராயம் குடித்தல். பீடி குடித்தல், தம்பாக்கு போடுதல், சண்டை போடுதல் போன்ற பாவங்களுக்கு அடிமைப்பட்டிருந்தார். மிகவும் அந்தகாரமான வாழ்க்கை வாழ்ந்து வந்தார். அவருடைய கிராம மக்களைப் போலவே மந்திரவாதிகளை தெய்வமாக மதித்து வந்தார். பாவத்தைக் குறித்த எந்தவிதமான அறிவும் இல்லாதவனாக காணப்பட்டார்.

இவர் வியாதியினால் மிகவும் அதிகமான கஷ்டத்தை அனுபவித்துக் கொண்டிருந்தார். இவருடைய குடும்பத்தினர் முழுவதும் பிசாசின் பிடியில் அதிகமாக பாதிக்கப்பட்டு கஷ்டப்பட்டார்கள். இதி–ருந்து விடுதலை பெறுவதற்கு அதிகமான மந்திர கிரியைகள் மற்றும் மருத்துவம் செய்தும் விடுதலை கிடைக்காமல் மிகவும் வேதனையோடு இருந்தார்கள். நாளுக்கு நாள் பிசாசின் போராட்டம் அதிகரித்துக் கொண்டேயிருந்தது. மிகவும் சோர்ந்து போயிருந்த நேரத்தில் சகோ. குல்லா டாமோர் என்ற ஊழியர் இவருடைய கிராமத்திற்கு வந்து சுவிஷேசம் அறிவித்து மக்களுக்காக ஜெபித்து வந்தார். அவரை இவர் தங்கள் வீட்டிற்கு வந்து ஜெபிக்கும்படி கூறினார். ஊழியரும் இயேசுவைப் பற்றிக் கூறி பாரத்தோடு ஜெபித்தார். ஜெபித்த நாளி–ருந்து சிறிது சிறிதாக பிசாசின் பிடியி–ருந்து விடுதலை பெற ஆரம்பித்தார்கள். இயேசுதான் உண்மையான ஜீவனுள்ள தேவன் என்று அறிக்கை செய்து இயேசுவை ஏற்றுக் கொண்டார்கள். பக்கத்துக் கிராமத்தில் நடைபெற்று வந்த ஆராதனையில் கலந்து கொண்டு பாவத்தி–ருந்தும், வியாதியி–ருந்தும் பூரணமாக விடுதலை பெற்றுக் கொண்டார்.

பின்பு இயேசு இல்லாமல் வாழ்கிற இவருடைய பீல் மக்களுக்கு இயேசுவை அறிவிக்க வேண்டும் என்ற வாஞ்சையும், ஆத்துமபாரமும் ஏற்படவே இவருடைய வாழ்க்கை முழுவதையும் அர்ப்பணித்து ஷாலோம் ஊழியத்தில் இணைத்து பக்கத்து கிராமமாகிய ஜாபனியார் என்ற கிராமத்தை மையமாக வைத்து ஊழியம் செய்து வருகிறார். இவருக்காகவும் இவருடைய ஊழியங்களுக்காகவும் ஜெபித்துக் கொள்ளுங்கள்.

இந்த சுதேச ஊழியரை காவேரிப்பட்டிணத்தைச் சேர்ந்த **பாஸ்டர் பாண்டியன்** (சீயோன் பெந்தேகொஸ்தே சபை) அவர்கள் தாங்கி வருகிறார்கள்.

## ✍ உங்கள் சகோதரனிடமிருந்து....



***ஆண்டவராகிய இயேசுவின் நாமத்தில் வாழ்த்துக்கள்.***

கடந்த மாதம் முழுவதும் கர்த்தர் நம்மை காத்து நடத்தினார். பீல் மக்கள் ஊழியத்திலும் கர்த்தர் போதுமானவராக இருந்தபடியால் தேவனைத் துதிக்கிறோம்.

கடந்த 08.07.08 அன்று எங்கள் திருமண நாளாக நினைவு கூர்ந்து அநேகர் தொலைபேசி மூலமாகவும் ஈ–மெயில் மற்றும் கடிதங்கள் மூலமாகவும் வாழ்த்தி ஜெபித்தார்கள். உங்கள் யாவருக்கும் என் குடும்பத்தின் சார்பில் நன்றி கூறுகிறேன். குறிப்பாக அதிகமான ஊழிய சுமைகள் மத்தியிலும் அன்று **டாக்டர் பால் தினகரன்** அவர்கள் தொலைபேசியில் அழைத்து ஜெபித்து ஆசீர்வதித்தார்கள். தேவனுடைய வல்லமையும், புதிய அபிஷேகமும் எங்களை நிறைத்தது. தேவன் தம் தாசன் மூலமாக ஊழியத்திற்கும், குடும்பத்திற்கும் நல் வார்த்தைகளை தீர்க்கதரிசனமாக உரைத்தார். தேவனுக்கே மகிமை! மட்டுமின்றி ஊழியத்தின் திரளான தேவைகள் சூழ்ந்திருக்கும்போது இயேசு அழைக்கிறார் ஊழியத்தின் மூலமாக ரூ. 2 லட்சங்கள் நம் பீல் மக்கள் ஊழியத்திற்கும்; எங்கள் குடும்ப நலனுக்காக ரூ. 50,000/– அனுப்பி வைத்தார்கள். தன் தகப்பன் **D.G.S. தினகரன்** அவர்கள் செய்த ஊழியங்களையும் தான தர்மங்களையும், உதவிகளையும் மறவாது எடுத்து செய்யும் அன்பு சகோதரர் டாக்டர் பால் தினகரன் அவர்களுக்காக தேவனைத் துதிக்கிறேன். இயேசு அழைக்கிறார் காருண்யா, பெதஸ்தா, சீஸா ஊழியங்களுக்காக ஜெபிப்போம்.

ஆதிவாசி மாணவர் கல்வி பணி வளர்ச்சி திட்டங்களுக்காக ரூ. 4 இலட்சங்கள் தேவைப்பட்டது. இதுவரை சுமார் ரூ. 2 இலட்சங்கள் பெற்றுக் கொண்டோம். ஊக்கத்துடன் கொடுத்த சபைகள், குடும்பங்கள், குறிப்பாக உண்டியல் மூலமாக சேகரித்துத் தந்த சிறு பிள்ளைகளுக்காகவும் தேவனைத் துதிக்கிறேன். மீதியான பணம் ரூ. 2 இலட்சங்களும் கிடைக்கப் பெறவும் ஜெபியுங்கள்.

ஜூலை மாதம் 1ம் தேதி குஜராத்தில் தாகோத் பணித்தள பயிற்சி வளாகத்தில் மூத்த ஊழியர்கள் குடும்பமாக இணைந்து ஸ்தோத்திர ஆராதனை ஏறெடுத்தோம். மேலும் 2,3 தேதிகளில் மத்தியபிரதேசம், இராஜஸ்தான் மாநில

தலைவர்களுடன் ஆலோசனை, ஜெபம் மற்றும் திட்டக்கூடுகை சிறப்பாக நடைபெற்றது. 11.07.2008 அன்று தலைவர்களாய் நிற்கிற சுமார் 80 ஊழியக்காரிகள் இணைந்து தாகோத்தில் சகோதரி வஹிதா தேவதாஸ் தலைமையில் சிறப்பு உபவாச கூடுகை, திட்டங்கள் செயல்படும் கூட்டமும் நடைபெற்றது. ஜூலை 12,14,21,23 ஆகிய நாட்களில் மூன்று மாநிலங்களிலுள்ள அனைத்து ஊழியர்களின் சிறப்பு கூடுகை நடைபெற்றது. எல்லா கூடுகைகளிலும் பரிசுத்த ஆவியானவர் அளவில்லாமல் ஊற்றப்பட்டார். 36 மாதங்களுக்குள் தேவனுக்காக இரட்டிப்பான காரியங்களை நடப்பிக்க தீர்மானித்து அர்ப்பணித்துள்ளார்கள். முழு பீல் மக்களின் இரட்சிப்பிற்காக அனைவரும் ஜெபியுங்கள்.

ஆகஸ்ட் 1,2,3 ஆகிய தேதிகளில் சத்தியமங்கலத்தில் நடைபெறும் எழுப்புதல் கூட்டங்கள் மற்றும் உபவாச கூடுகைகளில் அநேகர் பங்கு பெற பரிசுத்த ஆவியானவர் ஊற்றப்பட அநேகர் விடுதலை, சுகம் பெறவும், இரட்சிப்படையவும், குறிப்பாக மிஷனெரி ஊழிய பாரம் பெற்று ஜெபித்துத் தாங்குவோர் எழும்ப ஜெபியுங்கள். ஆகஸ்ட் மாதம் பணித்தளத்தில் நடைபெறும் பயிற்சி முகாம்கள், திட்டங்கள், மூப்பர்கள் முகாம்கள் இவைகளுக்காக ஜெபியுங்கள்.

Compassion Project, Homes, பள்ளி பணிகள், ஆலய கட்டுமான பணிகள், சபை வளர்ச்சி பணிகள் மற்றும் தாகோத் அலுவலக பணிகள், தூத்துக்குடி தலைமை அலுவலக பணிகள், பத்திரிக்கை ஊழியங்கள் ஆசீர்வதிக்கப்படவும் ஜெபியுங்கள். நம் தேசத்தின் ஆசீர்வாதத்திற்காகவும், நம் தேசத்திலுள்ள சபைகளுக்காகவும், மிஷனெரி பணிகளுக்காகவும் ஜெபியுங்கள்.

***உங்கள் யாவருக்காகவும் தொடர்ந்து ஜெபித்து வருகிறோம்....***

**நீ பயப்படாதே; நான் உனக்குக் கேடகமும்,**
**உனக்கு மகா பெரிய பலனுமாயிருக்கிறேன்.**

ஆதியாகமம் 15:1.

தேவ அறுவடை பணியில் உங்கள் அன்பு சகோதரன்,

வே. தேவதாஸ்

**மேலும் என்னுடன் தொடர்பு கொள்ள 09377445468**

# தேசத்திற்கு ஷேமத்தை கொடுப்பேன்

சிறப்பு செய்தி : **சகோ. V. தேவதாஸ்**

நம்முடைய ஆண்டவர் தேசத்தை ஆசீர்வதிக்கிற தேவன். தேவன் தனிப்பட்ட மனிதனையோ, குடும்பத்தையோ மட்டுமல்ல முழு சமுதாயத்தையும், தேசத்தையும் ஆசீர்வதிக்கும் கர்த்தராக இருக்கிறார். வேதம் சொல்லுகிறது தேசத்திற்கு ஷேமத்தை, ஆசீர்வாதத்தை தரும்படியாக தேவன் தம்முடைய நாமம் தரிக்கப்பட்ட ஜனங்களைதான் தெரிந்துள்ளார். அது மட்டுமல்ல தம்முடைய ஜனங்கள் தேவ சபையில் வந்து தேவனை தேடும்போது ஆசீர்வாதத்தை தேசத்தின்மேல் தேவன் கொடுக்கிறார்.

**<u>சபை தேசத்திற்கு ஆசீர்வாதம்:</u>**

சாலமோன் II நாளா 7 : 1–11 வாசித்து பாருங்கள். தேவாலயத்தை பிரதிஷ்டை செய்து முடித்தபோது அக்கினி பரலோகத்தி–ருந்து புறப்பட்டு வந்தது. மட்டுமன்றி இராஜாவாகிய சாலமோனுக்கு தேவன் தரிசனமாகி வாக்குத்தத்தம் செய்கிறார். ஆலயத்தில் தேவஜனங்கள் கூடி ஜெபிக்கும்போது ஷேமத்தை, ஆசீர்வாதத்தை தேவன் தருகிறார். 6–ம் அதிகாரத்தில் தேசத்தில் குறைவு உண்டானது, யுத்தங்களும், பஞ்சங்களும் வந்தன. அப்போது புறஜாதி மக்களும், சாலமோன் ராஜாவும் ஆலயத்திற்கு தேடிவந்து (II நாளா 6 : 32, 33) தேசம் ஆசீர்வதிக்கப்பட வேண்டும் என வேண்டிக்கொண்டார். அதை அப்படியே தேவன் ஏற்றுக்கொண்டார். எனவே சபை மூலமாக தேவன் தேசத்தையும், தேசத்திலுள்ள ஜனங்களையும் ஆசீர்வதிக்க விரும்புகிறார். சபையில் நாம் தேசத்திற்காக, நல்வாழ்வுக்காக, ஆசீர்வாதத்திற்காக ஜெபிக்கும்போது சபையார் ஜெபத்தை கேட்கிறார். புதிய ஏற்பாட்டில் அப்போஸ்தல சபையில் தேவ ஜனங்கள் ஜெபித்தார்கள். அந்த இடம் அசைந்தது. தேசமெங்கும் சுவிசேஷம் பரவியது. அப்போஸ்தலர் 12–ம் அதிகாரத்தில் சபையார் ஊக்கமாக ஜெபித்தார்கள். தேவ ஊழியர் கட்டுகளி–ருந்து விடுவிக்கப்பட்டார்கள். தேவனுக்கு மகிமை செலுத்தாத ஏரோது ராஜா புழு புழுத்து செத்தான். சபைக்கு தேவன் அதிகாரம் தந்துள்ளார். மத்தேயு 16 : 18–ன்படி பாதாளத்தின் வாசல்கள் அதை மேற்கொள்ளுவதில்லை. சபை கூடி ஜெபிக்கும்போது தேவன் தேசத்தை ஆசீர்வதிக்கிறார்.

**<u>தேவ ஜனங்கள் தேசத்திற்கு ஆசீர்வாதம்:</u>**

வேதத்தை ஆராய்ந்து பாருங்கள். தேவ ஜனங்கள் எங்குண்டோ அங்கெல்லாம் ஆசீர்வாதம். யோசேப்பை குறித்து என்ன காண்கிறோம்.

சிறைச்சாலையில் அடிமையாக இருந்த அவன் முழு எகிப்தியருக்கும் ஆசீர்வாதமாக மாறினார். யோசேப்பின் பரிசுத்தமும், அவனுக்கு தேவன் தந்த தரிசனத்தின் மேல் கொண்ட அவனது விசுவாசமும் அவனை உயர்தின. இன்றைக்கும் நம் தேசம் ஆசீர்வதிக்கப்பட தேவ ஆவியால் நிரப்பப்பட்ட யோசேப்புகள் எழும்பவேண்டும்.

தானியேலைக் குறித்து என்ன காண்கிறோம். அந்நிய தேசத்தில் சிறைவைக்கப்பட்டு ஒரு அடிமையாக சென்றிருந்தாலும் சர்வ வல்லமையுள்ள யெகோவா தேவனுக்கு சாட்சியாக நின்றார். தான் ஆராதிக்கும் தேவன் விடுவிக்கிறவர்..... விடுவிக்காமல் போனாலும் அவரை விடமாட்டோம் என்று அந்த தேவன் பேரில் கொண்ட விசுவாசமல்லவா? சாத்ராக், மேஷாக் ஆபேத்நேகோ மூலம் தேவனுடைய நாமம் உயர்த்தப்பட்டது. தானியேல் தன் ஜெபவாழ்க்கையிலும், தேவனுடன் கொண்ட உறவி–ருந்தும் விலகவே இல்லை. அந்நிய தேசத்தில் தேசத்திற்காக, ராஜாவுக்காக பணிபுரிந்தாலும் கர்த்தருக்கு முத–டம் தந்தபடியால் வேளை வந்தபோது சொப்பனத்திற்கு பதில் சொல்ல தேசத்தில் எவருமே இல்லாதபடி தேவன் தானியேலை ஞானத்தினால் நிரப்பி உயர்த்தி தேசத்திற்கு ஆசீர்வாதமாக மாற்றினார். தானியேல் போல் தேசத்தில் தேவனுக்காக எழும்பும் ஜெப வீரர், விசுவாச வீரர்கள் தேவை.

மற்ற மதத்தைச் சேர்ந்த ஒரு பேராசியர் ஒருவர் பின்வருமாறு கூறினார். "கிறிஸ்தவர்களாகிய நீங்கள் இயேசுவைப் போல் வாழ்ந்தால் நாளைக்கே இந்த உலகம் உங்கள் காலடியில் வந்து விழுந்து கிடக்கும்". இந்த வார்த்தைகளை கேட்ட ஜான் ஸ்காட் என்பவர் "கிறிஸ்தவர்களாகிய நாம் இயேசு கிறிஸ்துவைப் போல் வாழ்வோமானால் இன்றைக்கே இவ்வுலகம் நமது காலடியில் வந்து விழுந்து கிடக்கும். சுவிசேஷம் பரவுவதற்கு மாபெரும் தடையாக இருப்பது திருச்சபையும், தேவ ஜனமாகிய நாமே" என்று கூறினார். ஆகவே அவர் நாமம் தரிக்கப்பட்ட தேவ ஜனங்களாகிய நாம் அவருக்கு சாட்சிகளாய் ஜீவிப்போம். தேசத்திற்காக ஜெபிப்போம். பரிசுத்த பவுல் 1 தீமோ. 2 : 1 – 3 வரை பின்வருமாறு கூறுகிறார். நான் பிரதானமாய்ச் சொல்லுகிற புத்தியென்னவெனில், எல்லா மனுஷருக்காகவும் விண்ணப்பங்களையும் ஜெபங்களையும் வேண்டுதல்களையும் ஸ்தோத்திரங்களையும் பண்ணவேண்டும்; நாம் எல்லாப் பக்தியோடும் நல்லொழுக்கத்தோடும் கலகமில்லாமல் அமைதலுள்ள ஜீவனம்பண்ணும்படிக்கு, ராஜாக்களுக்காகவும், அதிகாரமுள்ள யாவருக்காகவும் அப்படியே செய்யவேண்டும். நம்முடைய இரட்சகராகிய தேவனுக்கு முன்பாக அது நன்மையும் பிரியமுமாயிருக்கிறது.

தேசம் ஆசீர்வதிக்கப்பட தேவ ஜனங்களாகிய நாம் தேசத்திற்காக ஜெபிக்க

கடமைப்பட்டுள்ளோம். அதுவே வேதம் காட்டும் வெளிச்சமாகும். நீங்கள் உலகத்திற்கு வெளிச்சமாயிருக்கிறீர்கள். (மத். 5 : 14) என்று இயேசு கூறினார்.

**தேசத்திற்கு தேவன் தரும் ஆசீர்வாதங்கள்:**

தேவ ஜனங்கள், சபையாக கூடி தேவனுடைய முகத்தை தேடும்போது; தங்களை தாழ்த்தும்போது, பொல்லாத வழிகளை விட்டு விலகும்போது தேவன் முதலாவது தேசத்திற்கு ஷேமத்தை தருகிறார். IIநா 7:14.

அடுத்தபடியாக தேசத்தில் இளைப்பாறுதலை கட்டளையிடுகிறார். ஆசா ராஜாவின் காலத்தில் அப்படியாக இருந்தது. நம்முடைய தேவனாகிய கர்த்தர் அவனுக்கு இளைப்பாறுதலைக் கட்டளையிட்டதினால், அந்த வருஷங்களில் அவனுக்கு விரோதமான யுத்தம் இல்லாதிருந்தது. (II நாளா 14 : 6,7)

"நான் அவர்களையும் என் மேட்டின் சுற்றுப்புறங்களையும் ஆசீர்வாதமாக்கி, ஏற்றகாலத்திலே மழையைப் பெய்யப்பண்ணுவேன்; ஆசீர்வாதமான மழை பெய்யும்". எசே 34 : 26

"தேசமே பயப்படாதே, மகிழ்ந்து களிகூரு; கர்த்தர் பெரிய காரியங்களைச் செய்வார்". (யோவேல் 2 : 21)

"அவர் தக்கபடி உங்களுக்கு முன்மாரியைக் கொடுத்து, உங்களுக்கு முன்மாரியையும் பின்மாரியையும் ஏற்கெனவே வருஷிக்கப்பண்ணுவார். களங்கள் தானியத்தினால் நிரம்பும்; ஆலைகளில் திராட்சரசமும் எண்ணெயும் வழிந்தோடும்". (யோவேல் 2 : 23,24)

"நான் மாம்சமான யாவர்மேலும் என் ஆவியை ஊற்றுவேன்; அப்பொழுது உங்கள் குமாரரும் உங்கள் குமாரத்திகளும் தீர்க்கதரிசனஞ் சொல்லுவார்கள்; உங்கள் மூப்பர் சொப்பனங்களையும், உங்கள் வா–பர் தரிசனங்களையும் காண்பார்கள். ஊழியக்காரர்மேலும் ஊழியக்காரிகள்மேலும் அந்நாட்களிலே என் ஆவியை ஊற்றுவேன்". (யோவேல் 2: 28,29)

"பூமி கர்த்தரை அறிகிற அறிவினால் நிறைந்திருக்கும்" (ஏசாயா 11:9)

பாரத தேசத்தின் ஆசீர்வாதத்திற்காக ஆவியானவர் அப்போஸ்தலர் தோமாவையே முதல் நூற்றாண்டில் அனுப்பி வைத்தார். ஒவ்வொரு நூற்றாண்டிலும் தேவன் அனுப்பிவைத்த கடல் கடந்து வந்த மிஷனெரிமார்களுக்காக நன்றி கூறுவோம். தொடர்ந்து பாரததேசம் ஆசீர்வதிக்கப்பட சுவிசேஷ தீபம் ஒவ்வொருவர் இருதயத்தில் ஊற்றப்பட சபையாக, தேவ ஜனமாக சாட்சியாய் ஜீவிப்போம். இயேசுவின் வருகைக்கு அநேகரை ஆயத்தம் செய்வோம்.

## ஷாலோம் ஊழிய பிரதிநிதிகள் தேவை!



கிறிஸ்துவுக்குள் மிக அன்பானவர்களே, 17 வருடங்களை ஊழியப்பாதையில் கடந்துவர தேவன் கிருபை தந்துள்ளார். பீல் மக்கள் திரளாக இரட்சிக்கப்பட, பீல் சுதேச ஊழியர்களை தந்து, ஆலயங்கள் கட்டப்பட கிருபை செய்துள்ளார். இம்மாபெரும் மிஷனெரிபணியில் நாங்கள் மோசேயை போல் முன்னாக நின்று ஊழியங்களை நடத்தி சென்றாலும் எங்களுடன் பணிபுரிய அநேக யோசுவாக்களை, பீல் சுதேச ஊழியர்களை தேசத்தை சுதந்தரிக்க தேவன் எழுப்பியுள்ளார். அதுபோல் ஜெபித்து, தாங்குகிற நீங்கள் தான் மிக முக்கியமானவர்கள். ஆரோன், ஊரைப்போல் நீங்கள் தாங்குவதின் நிமித்தமாக யேகோவா நிசி தேவன் மூலமாக வெற்றியை சுதந்தரிக்கிறோம்.

மேலும் ஆரோன், ஊரைப்போல் தாங்குகிற நீங்கள் எங்களுக்கு மிக முக்கியமானவர்கள். இப்பணியில் இன்னும் 36 மாதங்களில் 1000 ஊழியர்களை, 1000 சபைகளை ஸ்தாபிக்க மேலும் உங்கள் உதவியை நாடுகிறோம். உங்களில் பலர் மிஷனெரி பணி செய்ய வேண்டும் என்கிற வாஞ்சை கொண்டவர்கள் என விசுவாசிக்கிறேன். நீங்கள் மிஷனெரியாக செல்லமுடியவில்லை ஆனாலும் ஆத்தும பாரத்துடன் ஜெபித்து தாங்கி வருகிறீர்கள். அதற்காக தேவனை துதிக்கிறேன். நீங்கள் இன்னும் மிக நெருக்கமாக, அதிகமாக சற்று மிஷனெரி பணியில் ஈடுபட, பீல் மக்கள் திரளாய் இரட்சிக்கப்பட உங்களை ஈடுபடுத்த இன்னும் சில வாய்ப்புகளை தருகிறோம்.

ஷாலோம் மிஷனெரி பணிக்கென நீங்கள் பிரதிநிதியாக உங்கள் பகுதியில் செயல்பட உங்களை அன்புடன் அழைக்கிறேன். நம் மிஷனெரி பணியை ஜெபித்து தாங்குவோர் உங்கள் பகுதியில் சில தேவபிள்ளைகள் இருக்கிறார்கள். அவர்களை நீங்கள் சந்தித்து மாதந்தோறும் அவர்கள் தரும் காணிக்கையை ஜெபித்து வாங்கி, சேர்த்து அனுப்பி வைக்கலாம். ஏற்கனவே உள்ள ஷாலோம் ஆதரவாளர் சொற்பமாக இருந்தாலும், இல்லையெனில் யாருமே இல்லாவிட்டாலும் நம் பணிகளை உங்களை சுற்றியுள்ள தேவ ஜனங்களுக்கு பத்திரிக்கை, பிரதிகள், VCD மூலமாக அறிமுகம்

செய்து பங்காளர்களாக இணைய வைத்து ஜெபித்து தாங்க முன் வரலாம். குறைந்தது ஐந்து பேர்களையோ பத்து பேர்களையோ அறிமுகம் செய்து காணிக்கைகளை மாதம் மாதா சேர்த்து அனுப்பலாம். இதுவரை நம் ஊழியத்திற்கு 38 பிரதிநிதிகள் காணிக்கை சேர்த்து அனுப்பி வருகிறார்கள்.

பிரதிநிதிகளாக செயல்பட முன்வருவோர் எங்களை தலைமை அலுவலகத்தில் தொடர்பு கொள்ளவும். அப்படி முன்வரும் பிரதிநிதிகளுக்கு விளக்கங்களைக் கூறி ஷாலோம் பத்திரிக்கைகள் மற்றும் Phamlet, CD, VCD –இவைகளுடன் நீங்கள் காணிக்கை சேகரிக்க Recepit Book (3 Copies உடன்) அனுப்பிவைப்போம். அந்த பகுதியில் உள்ள ஷாலோம் ஆதரவாளர்களுக்கு ஷாலோம் மாத பத்திரிக்கையில் உங்களை அறிமுகம் செய்து வைப்போம். நீங்கள் சேகரிக்கும் காணிக்கைகளை மாதந்தோறும் Cheque, DD மூலமாகவோ அல்லது வங்கியில் நேரடியாகவோ செலுத்தலாம். 2ம் ரசீது பிரதிகளை ஷாலோம் தலைமை அலுவலகத்திற்கு அனுப்பி வைக்க வேண்டும்.

இது நீங்கள் பீல் மக்கள் இரட்சிப்பின் பணிக்காக செய்யும் மிகப்பெரிய உதவிமட்டுமல்ல மிஷனெரி பணியில் முக்கியப் பங்கு பெறுகின்றீர்கள். நீங்கள் சிறிதாக அறிமுகப்படுத்துவதன் மூலம் மிஷனெரி ஆதரவாளர்கள், சிறப்பு நன்கொடையாளர்கள், ஆலயக்கட்டுமான பணி ஆதரவாளர்கள் ஆகியோரை தேவன் உங்களுக்கு கட்டாயம் தருவார். **“தீர்க்கதரிசியை ஏற்றுக் கொள்ளுகிறவன் தீர்க்கதரிசிக்கேற்ற பலனை அடைவான்.”** (மத். 10:41) என்ற அருள் நாதர் இயேசுகிறிஸ்துவின் வாக்கின்படி மிஷனெரி பணியை ஏற்றுக் பிரதிநிதியாக பணிபுரிய முன்வரும் உங்களை கர்த்தர் ஆசீர்வதிப்பாராக!

**“நம் தேசம் தேவனை அறிந்து கொள்ள வேண்டுமானால் தேவபிள்ளைகள் அனைவரும் ஆளுக்கொரு கை ஆண்டவருக்காக வை”** என்ற சொல்–ன்படி செயல்படுவோம் முன்வாருங்கள் விபரங்களுக்கு ஷாலோம் தலைமை அலுவலகத்திலுள்ள அல்லது சகோ. சாம் குணசீலன் அவர்களையோ தொடர்பு கொள்ளுங்கள். (செல் : 093456–75468)

தேவன் தாமே உங்களை ஆசீர்வதிப்பாராக!

## பணித்தள சாட்சிகள்
தேவனுக்கே மகிமை

**சகோ. குமன் டாமோர்** **தாத்கட் (குஜராத்)**
ராஜ்யாபாய் என்ற சகோதரர் நான்கு மாதங்களாக மூச்சுவிடமுடியாமல் மிகவும் கஷ்டப்பட்டுக் கொண்டிருந்தார். அநேக மருந்துகள் சாப்பிட்டும் சரியாகவில்லை. இறுதியாக இயேசுவை சொந்த இரட்சகராக ஏற்றுக் கொண்டு ஆலயத்திற்கு வந்து விசுவாசித்து ஜெபித்தபோது தேவன் அற்புத சுகத்தைக் கொடுத்தார்.

**சகோ. கால்சிங் கராசியா** **உண்டார் (குஜராத்)**
கேசார்பேன் என்ற சகோதரிக்கு இரவில் கெட்ட கெட்ட கனவாக வந்து கஷ்டப்படுத்திக் கொண்டிருந்தது. இந்த சகோதரிக்காக விசுவாசித்து ஜெபித்தபோது பூரண விடுதலையைக் கொடுத்தார்.

**சகோ. வார்சிங் பார்மர்** **சிம–யா (குஜராத்)**
சைலேஷ்பாய் என்ற 20 வயது சகோதரனுக்கு ஒரு மாதமாக பைத்தியம் பிடித்துவிட்டது. மந்திரவாதிகளிடமும் மருத்துவரிடமும் கொண்டு சென்றும் பலனில்லை. இறுதியாக சபைக்கு அழைத்த வந்தார்கள். அந்த சகோதரனுக்காக விசுவாசத்துடன் ஜெபித்தபோது தேவன் அற்புதமான சுகத்தைக் கொடுத்தார்.

**சகோ. அன்கர்லால் L. வாசுனியா** **குண்டா–யா (இராஜஸ்தான்)**
சமாபேன் என்ற சகோதரி 4 வருடமாக பிசாசின் பிடியில் சிக்கி இருந்தாள். இதனால் பலவிதமான நோயினால் பாதிக்கப்பட்டாள். மருத்தும் மற்றும் மந்திரக் கிரயைகள் செய்தும் பலன் கிடைக்கவில்லை. இறுதியாக இயேசுவை ஏற்றுக் கொண்டு சபையில் வைத்து ஜெபித்த போது தேவன் அற்புத விடுதலையைக் கொடுத்தார்

**சகோ. ரூமியேல் D. ரானா** **வாக்கனர் (இராஜஸ்தான்)**
வா–பேன் என்ற சகோதரி மூன்று வருடமாக பிசாசின் பிடியில் சிக்கி அவதிப்பட்டுவந்தாள். அநேக இடங்களில் உள்ள மந்திரவாதிகளிடம் சென்று மந்திர கிரியைகள் செய்தும் பலனில்லை. இறுதியாக சபைக்கு வந்து விசுவாசித்து ஜெபித்த போது தேவன் பூரண விடுதலை கட்டளையிட்டார்

**சகோ. பார்த்து முனியா** **பூத்பாடா (இராஜஸ்தான்)**
தாகிபேன் மற்றும் புனியாபேன் ஆகிய சகோதரிகள் பிசாசின் பிடியி–ருந்து விடுபடவும் புதிய கிராமங்களில் ஊழியம் ஆரம்பிக்கப்படவும் ஜெபியுங்கள்.

**சகோ. நாத்துலாலா H. கராசியா** **ரோகானியா (இராஜஸ்தான்)**
வால்சிங்பாய் என்ற சகோதரர் அசுத்த ஆவியின் பிடியில் சிக்கி இருந்தார். இதனால்

நோய் ஏற்பட்டு கஷ்டப்பட்டுவந்தார். இவரை என்னிடம் அழைத்து வந்தார்கள். நான் பரிசுத்த ஆவியில் நிரம்பி இவருக்காக ஜெபித்தபோது தேவன் பிசாசின் பிடியி–ருந்தும் நோயி–ருந்தும் அவருக்கு விடுதலை தந்தார்.

**சகோ. சர்தார் B. டாமோர்** **பத்தியாபாடி (மத்தியபிரதேசம்)**

புஷ்பாபேன் என்ற சகோதரிக்கு வயிற்றில் கட்டி இருந்தது. இந்த சகோதரிக்காய் நாங்கள் பாரத்தோடு ஜெபித்தபோது தேவன் கட்டி மறையும்படி செய்தார்

**சகோ. சாமுல் டோடியார்** **கோட்டாரா (மத்தியபிரதேசம்)**

பேரூபேன் என்ற சகோதரியை பாம்பு கடித்துவிட்டது. நானும் சபையின் விசுவாசிகள் அனைவரும் இணைந்து இந்த சகோதரிக்காக விசுவாசத்துடன் ஜெபித்தோம். தேவன் ஜெபத்தைக் கேட்டு விஷத்தை நீக்கி ஜீவனைப் பாதுகாத்தார்.

**சகோ. பால் முனியா** **குட்டாயா (மத்தியபிரதேசம்)**


பாதர் மங்குளியா என்ற சகோதரருக்கு 5 வருடங்களாக கை மற்றும் கால்களில் அதிகமான வீக்கம் இருந்தது. அநேக மருத்துவம் மற்றும் மந்திர கிரியைகள் செய்தும் பலனில்லை. ஜெபிக்க வந்தபோது இந்த சகோதரனுக்காக நான் ஜெப எண்ணெய் பூசி ஜெபித்தபோது தேவன் சில நாட்களுக்குள்ளாக பூரண சுகத்தைக் கொடுத்தார்.

**சகோ. மங்கல்சிங் வாசுனியா** **சாலக்கியா (மத்தியபிரதேசம்)**

பாடிபேன் என்ற சகோதரியை பாம்பு கடித்துவிட்டது. அந்நேரமே அந்த சகோதரிக்கு ஜெப எண்ணெய் பூசி ஜெபித்த போது தேவன் விஷத்தை நீக்கி சுகத்தைக் கொடுத்தார்.

---

## *சந்தாவைப் பற்றி*



அன்பு பகிர்வு இயக்கம் செய்தி மலர் குஜராத், மத்தியபிரதேசம், இராஜஸ்தான் மாநிலங்களில் உள்ள பீல் ஆதிவாசிகள் மத்தியில் நடைபெறும் மிஷனெரி பணிகளுக்காக காணிக்கை அனுப்பும் ஆதரவாளர்களுக்கு ஊழியத்தைப் பற்றி அறிந்து கொள்ளவும், ஊழியத்திற்காக பாரத்துடன் ஜெபிப்பதற்காகவும் இந்த மலரை அனுப்புகிறோம்.

அன்பான ஆதரவாளர்களே, நீங்கள் அன்பு பகிர்வு இயக்கம் செய்தி மலரைப் பெற்று கொண்டிருப்பீர்களானால் இந்த வருடத்திற்கான (2008) பத்திரிக்கைச் சந்தாவை செலுத்தி பத்திரிக்கை ஊழியத்தை தாங்கவும், பத்திரிக்கை ஊழியம் வளர்ச்சி அடையவும் ஜெபிக்க அன்போடு கேட்டுக்கொள்கிறோம்.

**ஆண்டு சந்தா : ரூ.60/– ஆயுள் சந்தா : ரூ.600/–**

# *சாரா ஃபிளவர் ஆடம்ஸ்*

மிஷனெரி முன்னோடிகள்

## பாடல் : "உம்மண்டை கர்த்தரே"

"உம்மண்டை கர்த்தரே" எனும் இப்பாடலை எழுதியவர், சாரா ஃபிளவர் ஆடம்ஸ் அம்மையார். ஒரு நாள் இரவு அம்மையார் பெத்தே–ல் யாக்கோபு கண்ட கனவைக் கண்டார். எந்தக் கஷ்டமான நிலையிலும் கடவுள் தமது அடியார்களுக்கு அருள் செய்வார் என்னும் உறுதியான நம்பிக்கை அவர்களுக்கு உண்டாயிற்று. விழித்தெழும்பியதும், இக்கனவை ஒரு பாடலாக எழுத வேண்டும் என்னும் ஆவல் கொண்ட போது, இப்பாட–ன் சில வரிகள் மனதில் உண்டாயின. சில தினங்களுக்குப்பின், திரித்துவத்தை ஏற்றுக்கொள்ளாத யூனிட்டேரியன் சபையைச் சேர்ந்த வில்–யம் ஃபாக்ஸ் போதகர், தமது சபையில் யாக்கோபைக் குறித்துப் பிரசங்கம் செய்யப் போவதாக அம்மையாரிடம் கூறினார். அவ்வாராதனையில் பாடுவதற்கு யாக்கோபின் தரிசனத்தைப் பற்றியப் பாடல்கள் ஏதாவது உண்டா என அம்மையார் போதகரிடம் கேட்டார். பாடல் ஒன்றும் இல்லையெனப் போதகர் கூறவே, ஆடம்ஸ் அம்மையார் உடனே உட்கார்ந்து ஏற்கெனவே தன் மனதில் உருவான "உம்மண்டை கர்த்தரே" என்னும் பாடலை எழுதி, தன் சகோதரி எலைசாவின் உதவியால் ஒரு இராகத்தையும் அமைத்துக் கொடுத்தார். இது இப்போது நாம் பாடும் இராகமல்ல. அவ்வாராதனையில்தான் இப்பாடல் முதல் முறையாகப் பாடப்பட்டது. பின்னர், இப்பாட–ன் சிறப்பை உணர்ந்த சங்கீத நிபுணரான லவ்வல் மேசன் பண்டிதர், இப்போது நாம் பாடி வரும் "பெத்தானி" என்னும் அழகிய இராகத்தை அமைத்தார். இவ்வளவு துரிதமாக எழுதப்பட்ட இப்பாடலானது உலகம் முழுவதிலும் பாராட்டப்படும் என்று அம்மையார் நினைக்கவேயில்லை.

உலகத்திலேயே மிகப் பெரிய கப்பல் என அக்காலத்தில் கருதப்பட்ட "டைட்டானிக்" என்னும் பிரிட்டிஷ் கப்பல் 1912ஆம் ஆண்டு, ஏப்ரல் மாதம்

இங்கிலாந்தி—ருந்து அமெரிக்காவுக்குப் பிரயாணம் செய்து கொண்டிருந்தது. கப்ப—ல் 2000க்கும் அதிகமான பேர் இருந்தனர். ஏப்ரல் 14ஆம் தேதி நள்ளிரவில், மிதந்து வந்த ஒரு பனிமலையில் கப்பல் மோதி, உடைந்து அமிழத் தொடங்கியது. பிரயாணிகளில் மூன்றிலொரு பகுதிக்குத்தான் உயிர் மீட்சிப் படகுகள் (Life Boats) இருந்தன. ஆயினும் பிரயாணிகள் கலக்கம் அடையவில்லை. கப்ப—ன் வாத்தியக் குழுவினர், "உம்மண்டை கர்த்தரே" என்னும் பாட—ன் இராகத்தை தொனிக்க, பிரயாணிகள் யாவரும் இப்பாடலை உரத்த சத்தமாய்ப் பாடியவண்ணம் கட—ல் அமிழ்ந்தனர். பிரயாணிகளில் சுமார் எழுநூறுபேர் மட்டும் உயிர் தப்பினர்.

அமெரிக்க ஐக்கிய நாடுகளின் ஜனாதிபதியாக இருந்த வில்—யம் மாக்கின்லே என்பவர் இப்பாடலை பெரிதும் பாராட்டி, தாம் மரித்தபின் தமது அடக்க ஆராதனையில் இப்பாடல் பாடப்படவேண்டுமென விரும்பினார்.

இப்பாடலை எழுதிய சாரா பிளவர் அம்மையார் இங்கிலாந்தில் ஹார்லோ நகரில் 1805ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 22ஆம் தேதி பிறந்தார். இளவயதிலேயே தாயார் காச நோயினால் இறந்துபோகவே, சாராவும், சகோதரியாகிய எலைசாவும் தந்தையால் வளர்க்கப்பட்டனர். பின் அம்மையார் சிற்பக்கலை நிபுணரை மணந்து, குடும்ப வாழ்க்கை நடத்தி வந்தார். லண்டன் மாநகரில் ஒரு திறமையுள்ள நடிகையாகவும் இருந்தார். ஆனால் சுகவீனத்தினிமித்தம் நாடக மேடையை விட்டு இலக்கியம் எழுதுவதை மேற்கொண்டார். பின்னால் தந்தையாரும் இறந்துபோகவே, சகோதரியாகிய எலைசாவும், சாராவுடைய வீட்டிலேயே வசித்து வந்தார். 1847ஆம் ஆண்டு சாரா ஆடம்ஸ் அம்மையார் காசநோயால் பீடிக்கப்பட்டு, 1848ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம், 11ஆம் தேதி, தமது 43வது வயதில் காலமானார்.

சாரா ஆடம்ஸ் அம்மையார் நூற்றுக்கதிகமான பாடல்கள் எழுதியுள்ளார். இப்பாடல்களுக்கு அவருடைய சகோதரி எலைசா இராகங்கள் அமைத்து வந்தார். ஆனால் "உம்மண்டை கர்த்தரே" என்னும் ஒரே பாடல்தான் கிறிஸ்தவ உலகில் வெகுவாகப் பாடப்பட்டு வருகிறது. அவரது இதரப்பாடல்கள் பொதுவாக அமெரிக்காவில் குறிப்பாக யூனிட்டேரியன் சபைகளில் பாடப்படுகின்றன.

# பீல் ஆதிவாசி மாணவர் பராமரிப்புத் திட்டம்



| | | |
|---|---|---|
| மாணவனின் பெயர் | : | **சுக்லால் அடா** |
| தகப்பனார் பெயர் | : | பக்குல்சந்திரா அடா |
| தாயார் பெயர் | : | லக்குபேன் |
| பிறந்த நாள் | : | 22–02–2002 |
| படிக்கும் வகுப்பு | : | VI |
| சொந்த ஊரின் பெயர் | : | பிச்சவாடா |
| தாலூகா | : | குசல்கட் |
| மாவட்டம் | : | பான்ஸ்வாடா |
| மாநிலம் | : | இராஜஸ்தான் |
| படிக்கும் பள்ளி | : | Shalom School. |
| தங்கி படிக்கும் விடுதி | : | Bijalpur |

**மாணவனின் பெற்றோரைப் பற்றி சில வரிகள்:–**

இந்த மாணவனுடைய தகப்பனார் பக்குல்சந்திரா அடா, தாயார் லக்குபேன் ஆவார்கள். இவர்களுக்கு பிறக்கும் குழந்தைகள் பிறந்தவுடன் வியாதிப்பட்டு மரித்துவிடும். மந்திரம் மற்றும் மருத்துவம் செய்தும் எந்த பயனுமில்லை. மிகவும் வேதனையோடு இருந்த நேரத்தில் ஒரு நாள் இரவு தேவன் சகோ. பக்குல்சந்திரா அடா அவர்களின் கனவில் பேசி ஆறுதல் படுத்தினார். பின்பு இவர் பக்கத்து கிராமங்களில் நடைபெற்ற அனைத்து கூட்டங்களிலும் கலந்து கொண்டு ஜெபித்தார். தேவன் இவருடைய வாழ்வில் அற்புதம் செய்தார், குழந்தை செல்வத்தைப் பெற்றார். இதன் மூலம் இயேசுவை ஏற்றுக் கொண்டார். பின்பு தன்னுடைய வாழ்க்கையை அர்ப்பணித்து ஷாலோம் ஊழியத்தில் இணைந்து ஊழியம் செய்து வருகிறார். தேவன் இவரை வல்லமையாக பயன்படுத்தி வருகிறார்.

**மாணவனின் திறமை, தாலந்து மற்றும் வாஞ்சை:-**

ஜெபம் மற்றும் விளையாட்டில் மிகுந்த ஆர்வம் உண்டு. நன்றாக படிப்பான். கணிதத்தில் அதிக ஆர்வம் உண்டு. அமைதியான குணம் உடையவன். பள்ளியில் எல்லா காரியங்களையும் ஒழுங்காக கடைபிடிப்பான்.

**ஜெபியுங்கள்:-**

நல்ல முறையில் படிக்க தேவன் விசேஷித்த ஞானத்தைத் தரவும், நல்ல ஆரோக்கியத்திற்காகவும், குடும்பத்தின் ஆசீர்வாதத்திற்காகவும், பெற்றோர் செய்கிற ஊழியங்களை கர்த்தர் ஆசீர்வதிக்கவும் ஜெபியுங்கள்.

**இச்சிறுவனைத் தாங்குபவர் :** **Jesus Redeems,** Nalumavadi.

(இந்த சிறுவனைப் போல் இன்னும் 280 பிள்ளைகளுக்கு ஆதரவாளர்கள் தேவை.)

## EeLÞdÏ ERY GeLÞdÏ ERÜeLs

- உங்கள் விலாசத்தில் மாறுதல்கள், திருத்தங்கள் இருக்குமென்றால் சரி செய்து ***பழைய, புதிய முகவரிகளை*** தெரியப்படுத்துங்கள். ஏனெனில் நாங்கள் அனுப்புகின்ற பத்திரிக்கைகள் பல எங்களுக்குத் திருப்பி அனுப்பப்படுகின்றன. உங்களுக்கு ***ஒன்றுக்கு மேற்பட்ட பத்திரிக்கைகள்*** வருகிறதென்றால் எங்களுக்குத் தெரியப்படுத்துங்கள்.

- உங்கள் பகுதியில் நம் மிஷனெரி ஊழியத்தின் பிரதிநிதிகள் இருப்பார்கள் என்றால் அவர்களிடம் காணிக்கையைக் கொடுத்து இரசீதைப் பெற்றுக்கொள்ளுங்கள். மேலும் தலைமை அலுவலகத்திற்கு உங்கள் நகல் இரசீதும், பணமும் கிடைத்த பின்பு தலைமை அலுவலகத்தி–ருந்து உங்களுக்கு நன்றி கடிதம் அனுப்பி வைக்கப்படும்.

- நம்முடைய அலுவலகப்பணிகள் அனைத்தும் Computer மயமாக்கப்பட்டுள்ளது. அனைத்து ஆதரவாளர்களுக்கும் குறியீட்டு எண்(Sponser ID No) கொடுக்கப்பட்டுள்ளது. எனவே நீங்கள் எங்களை தொடர்பு கொள்ளும்போது தங்கள் குறியீட்டு எண்ணை (Sponser ID No -யை) தவறாது எழுதுங்கள்.

- நீங்கள் அனுப்புகின்ற காணிக்கை, மணியார்டர், டிராப்ட், காசோலை மற்றும் கடிதங்களுக்கு அதிகபட்ச இரு வாரங்களுக்குள் இரசீதும், நன்றிக் கடிதமும் வரவில்லையென்றால், உடனடியாக தூத்துக்குடி தலைமை அலுவலகத்திற்குத் தொலைபேசி அல்லது கடிதம் மூலம் தெரியப்படுத்த வேண்டுகிறோம். அதற்கேற்ற நடவடிக்கை எடுக்க ஏதுவாயிருக்கும்.

- நீங்கள் M.O அனுப்பும் போது எங்களுக்குக் கிழித்துக் கொடுக்கும் பகுதியில் உங்கள் ***தெளிவான முகவரியையும், ஜெபக்குறிப்புகளையும்*** எழுதி அனுப்பினால் உங்களுக்காக பாரத்துடன் ஜெபிக்க மிகவும் ஏதுவாயிருக்கும்.

- எங்களோடு தொடர்பு கொள்ளும்போது உங்களுடைய பங்காளர் எண்ணைக் (Partner No.) குறிப்பிடவும்.



## காணிக்கை அனுப்புவதற்கான வழிகள்

- ✷ தூத்துக்குடியில் உள்ள ஷாலோம் ஆதரவாளர்கள் நேரடியாக வர முடிந்தவர்கள் உங்கள் காணிக்கையை தூத்துக்குடி தலைமை அலுவலகத்திற்கு வந்து கொடுத்து ஜெபித்து ஆசீர்வாதத்தை பெற்றுக் கொள்ளுங்கள். உங்கள் பகுதியில் ஷாலோம் பிரதிநிதிகள் அல்லது ஷாலோம் ஊழியர்கள் இருந்தால் அவர்களிடம் காணிக்கையை கொடுத்து இரசீதை மறவாமல் பெற்றுக் கொள்ளுங்கள்.
- ✷ M.O. மூலம் தூத்துக்குடி தலைமை அலுவலகத்திற்கு அனுப்பலாம். அனுப்பும் போது உங்களின் தெளிவான முகவரியை கிழித்துக் கொடுக்கும் பகுதியில் எழுதும்படி கேட்டுக்கொள்கிறோம்.
- ✷ D.D./Cheque மூலமாக தூத்துக்குடி தலைமை அலுவலகத்திற்கு உங்கள் காணிக்கையை Sharing Love Mission என்ற பெயருக்கு அனுப்பலாம்.
- ✷ நீங்கள் வசிக்கும் ஊர்களில் கீழ் கண்ட வங்கிகள் இருந்தால் அங்கேயே எங்கள் கணக்கில் காணிக்கையை செலுத்தலாம்.

| வங்கி கணக்கு பெயர்<br>**Sharing Love Mission** | | |
|---|---|---|
| Tamilnad Mercantile Bank | - | 106100710400009 |
| Axis (U.T.I) Bank | - | 105010100094373 |
| I.C.I.C.I Bank | - | 613901112799 |
| Branch : Tuticorin, | | கிளை : தூத்துக்குடி |

- ✷ இன்டர்நெட்டில் NET TRANSFER வசதி உங்களுக்கு இருந்தால் NET TRANSFER மூலமாகவும் அனுப்பலாம்.
- ✷ வெளிநாட்டில் வசிப்பவர்கள் "V. DEVADOSS" (or) Sharing Love Mission என்ற பெயருக்கு D.D., (or) Cheque மூலமாக தூத்துக்குடி தலைமை அலுவலகத்திற்கு அனுப்பலாம்.

# உண்டியல் காணிக்கைக்காக நன்றி!

கிறிஸ்துவுக்குள் அன்பான உண்டியல் மூலம் காணிக்கை கொடுத்த உண்டியல் ஆதரவாளர்களே!

ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவின் இனிய நாமத்தில் வாழ்த்துக்கள். இந்த 2008ம் ஆண்டின் பீல் ஆதிவாசி பிள்ளைகளின் படிப்பு செலவிற்காக உண்டியல் மூலம் நீங்கள் சேர்த்துக் கொடுத்த காணிக்கைகளுக்காக தேவனைத்துதித்து உங்களுக்கு நன்றி கூறுகிறேன். **"சிறு துளி பெரு வெள்ளம்"** என்பது போல சிறு சிறு துளியாக காணிக்கை சேகரித்துக் கொடுத்த அன்பு பிள்ளைகளையும், பெரியவர்களையும், சபைகள், ஊழியங்கள் ஒவ்வொன்றையும் தேவன்தாமே ஆசீர்வதிப்பாராக!

**Pr. ஜோயல் அனந்தராஜ்** அவர்கள் (அப்போஸ்தல ஜெப வீடு, கோவை) மூலமாக பெற்றுக்கொண்ட உண்டியல் காணிக்கை ரூ. 21,160/–, **Pr. ஏசையன்** அவர்கள் (இம்மானுவேல் சபை, வால்பாறை) மூலமாக பெற்றுக் கொண்ட உண்டியல் காணிக்கை ரூ. 10,000/– இவற்றிற்காக நன்றி கூறுகிறோம். பெங்களூரில் தள்ளுவண்டியில் இட்–கடை வைத்த கஷ்டப்பட்டு தொழில் செய்கின்ற **சகோ. மாணிக்கராஜ்** அவர்கள் கொடுத்த உண்டியல் காணிக்கை ரூ. 5,150/– மார்த்தாண்டத்தில் தையல் தொழில் செய்கிற **சகோ. மேத்யு** அவர்களின் மகள் **லென்சி** சேகரித்த உண்டியல் காணிக்கை ரூ. 2,575/– இவற்றிற்காகவும் நன்றி கூறுகின்றோம். அனைவருமே தங்களுடைய கஷ்டத்தின் மத்தியில் கொடுத்துள்ளீர்கள். உங்கள் ஒவ்வொருவருக்கும் வேண்டிய கிருபைகளையும் நன்மைகளையும் தேவன் கொடுத்து உங்களை உயர்த்தி கணப்படுத்துவாராக!



Pr. ஜோயல் அனந்தராஜ்



Pr. ஏசையன்

இதுவரை உண்டியல் மூலமாக பீல் ஆதிவாசி பிள்ளைகளின் கல்வி திட்டத்திற்காக ரூ. 68,333/– கிடைக்கப்பெற்றுள்ளோம். மீதி காணிக்கைகள் வந்து கிடைக்க ஜெபிக்க அன்பாய் கேட்கிறேன். உண்டியல் திட்டத்தை உங்கள் நண்பர்கள், உறவினர்களுக்கு அறிமுகம் செய்து வைக்க அன்பாய் கேட்கிறேன்.

**-S. Sam Gunaseelan,** Manager

## நாட்டு நடப்புச் செய்திகள்....

இந்தியாவில் மிகப்பெரிய அரசியல் நெருக்கடி ஏற்பட்டுள்ளது. அணுசக்தி ஒப்பந்தத்திற்கு எதிர்ப்பு தெரிவித்து இடதுசாரி கட்சிகள் மத்திய அரசிற்கு அளித்து வந்த ஆதரவை வாபஸ் பெற்றுக் கொண்டன. இதனால் மத்தி அரசு கவிழும் நிலை ஏற்பட்டுள்ளது. காங்கிரஸ் தலைமையில் மத்திய அரசு தொடர்ந்து செயல்பட நம்பிக்கை வாக்கெடுப்பு நடைபெற உள்ளது.

செவ்வாய் கிரகத்தில் ஐஸ் கட்டிகள் இருப்பதும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. அமெரிக்காவைச் சேர்ந்த "நாசா" விண்வெளி ஆராய்ச்சி நிறுவனம் கடந்த 10 மாதங்களுக்கு முன்பாக அனுப்பிய பீனிக்ஸ் என்ற விண்கலம் 10 மாதங்கள் கழித்து செவ்வாய் கிரகத்தில் தரை இரங்கியுள்ளது. அதிலுள்ள ரோபோ எந்திரக் கை அங்குள்ள மண்ணை தோண்டிய போது மண்ணுக்கு அடியில் ஐஸ் கட்டிகள் இருப்பது தெரிய வந்தது. இதைப் பற்றிய ஆராய்ச்சி தொடர்ந்து நடைபெற்றுக்கொண்டுள்ளது.

கடந்த மாதம் 13ம் தேதி நாகை மாவட்டம் வேதாரண்யத்தை அடுத்த ஆறுகாட்டுத்துறை மீனவர் கிராமத்தைச் சேர்ந்தவர்கள் இரவு நடுக்கட—ல் மீன் பிடித்துக் கொண்டிருந்தபோது அங்கு ரோந்து வந்த இலங்கை கடற்படையினர் துப்பாக்கி சூடு நடத்தினர் இதில் இரண்டு மீனவர் மரணமடைந்தனர். மேலும் ஒரு படுகாயம் அடைந்துள்ளார். இதற்கு தமிழக மற்றும் இந்திய அரசு இலங்கை கடற்படைக்கு எதிராக கடும் எதிர்ப்பு தெரிவித்துள்ளன.

—நன்றி தினத்தந்தி

## அறிவிப்பு...

***கிறிஸ்துவுக்குள் மிகவும் பிரியமானவர்களே...***

அடுத்த மாதம் வெளிவர இருக்கும் **"அன்பு பகிர்வு இயக்கம் செய்தி மலர்"** 17ம் ஆண்டு சிறப்பு மலராக வெளிவர இருப்பதால் இந்த மாத இதழை மிகவும் சுருக்கமாக வெளியிட்டுள்ளோம். சிறப்பு மலரின் ஆயத்தப்பணிகளுக்காகவும், இதழை நல்ல முறையில் வெளியிடவும் ஜெபிக்கும்படி கேட்டுக் கொள்கிறோம்.

**எங்களுடன் தொடர்பு கொள்ள**

தலைமை அலுவலகம்

**Sharing Love Mission**

168/5, Caldwell Colony, 3rd Street,
**Tuticorin - 628 008.** Tamil Nadu.`

Phone: 0461 - 2375468
Cell : 9345675468

பணித்தள அலுவலகம்

Bro. V. Devadoss
Founder & General Secretary
Shalom, Christian Kamdar Society,
Dahod - 389 151, Gujarat

Ph. : 02673 - 325468
Cell : 09377445468

email : info@shalommission.in, Website : www.shalommission.in

# தாத்கட் கிராம ஆலயம்



குஜராத் மாநிலத்தில் தாத்கட் என்ற கிராமம் அமைந்துள்ளது. இந்த கிராமத்தில் **எத்தர்சிங் டாமோர்** என்ற சகோதரர் வசித்து வந்தார். இவருடைய விலாவில் ஒரு கட்டி இருந்தது. இதனால் இவர் மூன்று ஆண்டுகளாக வேதனைப்பட்டார். இந்தக் கட்டியை சுகப்படுத்துவதற்காக பல பூஜாரிகளிடம் சென்று ஆடு, கோழிகளை வெட்டி மந்திர கிரியைகள் செய்தார். மேலும் இதற்காக ரூ. 10,000,– செலவு செய்தார். ஆனால் கட்டி குணமாகவில்லை. நவராத்திரி சமயங்களில் கட்டியில் அதிக வேதனை காணப்படும். அந்த நாட்களில் தாத்கட் என்ற கிராமத்தில் பாப்ரிபேன் என்ற சகோதரி வீட்டில் சுதேச ஊழியர்கள் மன்னுபாபோர் மற்றும் சந்துபாய் டாமோர் ஆகியோர் மூலமாக **சகோ. தேவதாஸ் மற்றும் சகோதரி வஹிதா தேவதாஸ்** இருவரும் வந்து சுகமளிக்கும் கூட்டம் நடத்தினார்கள். இதைக் கேள்விப்பட்ட சகோ. எத்தர்சிங் டாமோர் தனது தயாருடன் கூட்டத்திற்கு வந்தார். ஜெபநேரத்தில் சகோ. தேவதாஸ் அவர்கள் அவரது கட்டியில் கைவைத்து ஜெபித்தபோது உடனடியாக கட்டி மறைந்தது. பூரண சுகம் கிடைத்தது. இந்த அற்புதத்தின் மூலமாக இயேசுவே மெய்யான தேவன் என்று அறிக்கையிட்டு அவரையே தன் சொந்த இரட்சகராக ஏற்றுக் கொண்டார். அதன் பிறகு ஊழியர் சந்துபாயுடன் இருந்து 7 வருடம் ஊழியத்தில் பங்கு பெற்று பரிசுத்த ஆவியின் வரம் பெற்றுக் கொண்டார். தேவனுடைய சித்தத்தின்படி அவருடைய வீட்டில் கூட்டம் ஆரம்பிக்கப்பட்டது. 25 குடும்பங்களை தேவன் தந்தார். தேவனை ஆராதிக்க ஒரு ஆலயம் வேண்டும் என்ற வாஞ்சை ஏற்படவே தனது சொந்த நிலத்தை ஒரு கிராம ஆலயம் கட்டுவதற்காக கொடுத்தார். அந்த இடத்தில் தேவ நாமம் மகிமைப்படும்படியாக ஒரு அழகிய கிராம ஆலயம் கட்டப்பட்டுளது.

இந்த கிராம ஆலயம் **Mr. David,** Chennai. அவர்கள் சார்பில் அளிக்கப்பட்ட நிதி உதவியில் கட்டப்பட்டது.

Registered with the Registrar of News Paper in India
Under No. TNTAM/2004/16449.
Postal Regn. No. TTN-07/2006-2008. TN/WPP-95/SR/2006-2008
Postal at Chidambaranagar P.O. 628008 on 25th & 28th of every month

# ஆசீர்வாதப் பெருவிழா–2008

இடம்

**மீனாட்சி திருமண மண்டபம்,**
**சத்தியமங்கலம்–2.**

| நாள் | நேரம் |
|---|---|
| 2008–ஆகஸ்ட், 1,2,3<br>வெள்ளி, சனி, ஞாயிறு | மாலை 6.30 மணிக்கு |

தேவ செய்தி

## சகோ. V. தேவதாஸ்

## சகோதரி D. வஹிதா தேவதாஸ்

❖ சுதேச ஊழியர்களின் சாட்சி நேரம்... ❖ அனல் மூட்டும் எழுப்புதல் செய்தி...



குறிப்பு–
சனிக்கிழமை காலை 10 மணி முதல்
1.00 மணி வரை
**அபிஷேக ஆராதனை**
நடைபெறும்



**குடும்பமாக கட்டாயம் வாருங்கள்! உங்கள் உறவினர் நண்பர்களுக்கு அறிமுகம் செய்து அழைத்து வாருங்கள்!!**

மேலும் தொடர்பு கொள்ள :–

## சகோ. ஜெபசிங் சந்தோஷம்

ஷாலோம் ஒருங்கிணைப்பாளர்,
தொட்டம்பாளையம். செல் : 94421–40655

Owned and Published by V. Devadoss from 168/5, Caldwell Colony, 3rd Street,
Tuticorin - 628 008. and Printed by S.Joseph at Rajan Press,
59, Palayamkottai Road, Tuticorin - 628 002. Editor : V. Devadoss